DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 19.12.2024.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.5 |
| Name | : | சுப்பிரமணியம் |
| Father Name | : | நடேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 19.12.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம், குமாரசாமிபட்டில் குடியிருந்து விவசாய தொழில் செய்து வருகிறேன். ஏற்காட்டிலுள்ள கிளேஷ் புரூக் எஸ்டேட்டில் ஆலோசகராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சுரேஷ் மேற்படி எஸ்டேட்டில் மேலாளராக வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி மேற்படி நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். கடந்த 10.03.2024–ம் தேதியன்று இரவு 10.15 மணியளவில் அ.சா.1 சுரேஷ் எனக்கு போனில் தொடர்புக்கொண்டு அங்கு எஸ்டேட்டில் உள்ள வட இந்திய தொழிலாளிகள் இருவர் சுரேஷிடம் சென்று தோட்டத்திற்குள்ளே ஒரு மூட்டை மிளகை யாரோ அறுவடை செய்து அந்த எஸ்டேட்டில் வைத்திருப்பதை பார்த்ததாக கூறியதாகவும், அதனால் சுரேஷிம், அவருடன் அங்கு பணிபுரியும் இரவு வாட்ச்மேன் வெள்ளையன் ஓட்டுநர் மற்றும் பிரவின்குமார் ஆகியோர் சென்று அந்த மூட்டை இருந்த இடத்தின் அருகே எப்படியும் மிளகை அறுவடை செய்த நபர் மூட்டையை எடுக்க வருவார் என்ற நம்பிக்கையில் அவர் வருவார் என காத்துக்கொண்டு இருந்ததாவும், அப்போது ஆஜர் எதிரி அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்து எஸ்டேட் அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு மூட்டைய எடுத்தபோது எதிரியை பிடிக்க முயன்றபோது எதிரி தப்பி ஓடிவிட்டதாகவும், அவ்வாறு ஓடிய போது வேலியை தாண்டி குதித்தபோது எதிரிக்கு காலில் அடிபட்டு விட்டதாகவும், அப்போது எதிரியை பிடித்து கேட்டபோது தெரியாமல் எடுத்துவிட்டதாக கூறியதாகவும், என்னிடம் சொன்னார்.

மேலும் எதிரியானவர் சுரேஷிடம் இந்த ஒருமுறை மட்டும் மன்னித்து விடுங்கள் என்று கேட்டதாகவும், அதனால் யோசித்துக்கொண்டிருப்பதாகவும் கூறி செல்போனை எதிரியிடம் கொடுத்தார் நான் எதிரியிடம் எதுவாக இருந்தாலும் நாளை காலையில் பேசிக்கொள்ளலாம் தற்போது வீட்டிற்கு செல் இரவு நேரமாகிவிட்டது என்று கூறினேன். சுரேஷிடம் எதிரியின் வண்டியை மட்டும் வாங்கி வைத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டு போன் இணைப்பை துண்டித்துவிட்டேன். நாங்கள் பெரியர்வகள் சேர்ந்து இது நிமித்தம் கலந்து முடிவு செய்யலாம் என்று எண்னி மறுநாள் காலையில் சுமார் 08.30 மணியளவில் நானும் கணேஷ், மாது, சுரேஷ், ஓட்டுநர் ஒருவர் ஆகியோரும் எஸ்டேட் அலுவலகத்திற்கு சென்றோம்.

அங்கு ஆஜர் எதிரியும் வந்தார். அவரிடம் நாங்கள் விசாரித்தபோது அவர் இதற்கு முன்பு 3 மூட்டை காப்பி கொட்டைகள், 1 மூட்டை மிளகை எடுத்திருப்பதாகவும், அதை வீட்டில் வைத்திருப்பதாகவும், அவைகளை எடுத்துவந்து கொடுத்துவிடுவதாகவும் கூறினார். அதனால் எங்கள் அலுவலகத்திலிருந்து சுரேஷ் மற்றும் இரு வடமாநில தொழிலாளர்களான அஜெய் மற்றும் சுர்ஜீவ் ஆகியோர்களை எதிரியுடன் அனுப்பி வைத்தோம். எதிரி அவரது வீட்டிலிருந்து 3 மூட்டை காப்பி கொட்டைகளையும், 1 மூட்டை மிளகையும் எடுத்துக்கொடுத்துவிட்டு அவர் எடுத்துக்கொடுத்ததை எதிரியின் மனைவி மூலம் செல்போனில் வீடியோ பதிவு செய்துள்ளார். எதற்காக வீடியோ பதிவு என்று கேட்டபோது எதிர்காலத்தில் பயன்படலாம் என்று கூறிவிட்டார். இது சம்மந்தமாக போலீசாரிடம் புகார் அளித்தோம்.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/. G. Thangakarthika
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud(FAC).